மாநிலத்தின் முதலமைச்சர் என்கின்ற முறையில் விமான நிலையத்திற்குச் சென்று, பிரதமரை வரவேற்க வேண்டியது என்னுடைய கடமையாகும்; மாநில முதலமைச்சரின் கடமையாகும். அந்தக் கடமையை நான் செவ்வனே செய்தேன்.

முற்பகல் 11-15

தி.மு.க.வுக்கு மத்திய அரசிடம், குறிப்பாக பிரதமரிடம் இவ்வளவு செல்வாக்கு இருக்கிறபோது, அந்தச் செல்வாக்கைத் தவறான வழிகளில் என்னை அவமானப்படுத்துவதற்காகவும், இந்த அரசுக்குத் தொல்லைகள் தருவதற்காகவும் மட்டுமே பயன்படுத்துகிறார்கள் என்பது வேதனைக்குரிய விஷயமாகும். இந்தச் செல்வாக்கை தி.மு.க. ஆக்கபூர்வமான வழிகளில் ஏன் பயன்படுத்தக்கூடாது? இந்த மாநிலத்திற்கு இன்னும் அதிகமான வறட்சி நிவாரண நிதியை மத்திய அரசு வழங்க வேண்டும், இந்த மாநிலத்திற்கு இன்னும் அதிகமான அரிசியை வழங்க வேண்டும், காவிரித் தண்ணீரை மத்திய அரசு பெற்றுத் தரவேண்டும் என்றெல்லாம் தி.மு.க. தனது செல்வாக்கைப் பயன்படுத்தி, ஏன் மத்திய அரசிடம் வற்புறுத்தக்கூடாது? ஏன் பிரதமர் அவர்களை வற்புறுத்தக்கூடாது? (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அதைச் செய்யமாட்டார்கள். ஏனென்றால், இந்த மாநிலத்தின் நலனில், இந்த மாநில மக்களின் நலனில், இந்த மாநிலத்தின் வளர்ச்சியில் தி.மு.க.-வினருக்கு அக்கறை இல்லை. அவர்களுடைய நோக்கமெல்லாம் குறுகிய அரசியல் கண்ணோட்டத்தோடு காழ்ப்புணர்ச்சியோடு, என்னைப் பழி வாங்கவேண்டும்; இந்த அரசுக்குத் தொல்லை தரவேண்டும்; என்னை அவமானப்படுத்த வேண்டும் என்பதாகத்தான் இருக்கிறதே தவிர, அவர்களுக்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் அக்கறை இல்லை. ஆகவே, மாநில முதலமைச்சருக்குத் தரப்பட வேண்டிய இடமும், மரியாதையும் மறுக்கப்பட்டதால்தான் நேற்றைய விழாவில் நான் கலந்துகொள்ளவில்லை என்பதைத் தெளிவுபடுத்தி அமைகிறேன்.

3. விதி 110-ன்கீழ் அறிக்கைகள்

(அ) சார்ஸ் நோய் எதிர்ப்பு சக்தியை ஊக்குவிக்கும் மருந்து குறித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 110-ன்கீழ் 3 அறிக்கைகளை வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி

2003 மே 5] [பேரவைத் தலைவர்]

கேட்டிருக்கிறார்கள். அனுமதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சார்ஸ்' என்னும் கடுமையான மூச்சுத் திணறல் நோய் தற்போது உலகை மிரட்டி வருகிறது. இந்நோய் பரவுவதால் பல நாடுகள் கவலையில் ஆழ்ந்துள்ளன. உலகச் சுகாதார ஆய்வு நிறுவனமும் இந்நோயைத் தடுக்க அனைத்து சோதனைகளையும் முடுக்கி விட்டுள்ளது. இன்னும் சில மாதங்களில் இதற்கு மருந்தைக் கண்டுபிடித்துவிடலாம் என்று அந்த அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது. அதேசமயம் இந்தியாவிலும் சார்ஸ் நோயைத் தடுக்கவும், அந்த வைரஸ் நுண்கிருமிகளைக் கண்டுபிடித்து அழிக்கவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது பரவி வரும் சார்ஸ் நோய்க்கு இயற்கை மருத்துவ முறைகளை சிங்கப்பூரில் பயன்படுத்துகிறார்கள்.

இந்த சார்ஸ் நோய்க்கு துளசி, மஞ்சள், மிளகு ஆகியவற்றை அருந்துவது நல்ல பலனைத் தருவதாகக் கூறுகிறார்கள். இரண்டு டம்ளர் தண்ணீரை ஒரு பாத்திரத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். துளசிச் செடியை வேருடன் பிடுங்கி, முழு சமூலத்தையும் நன்றாக நசுக்க வேண்டும். அதனை அந்தத் தண்ணீரோடு கலக்கவேண்டும். இத்துடன் ஒரு முழு டீஸ்பூன் அளவுக்கு சுத்தமான மஞ்சள் தூளைக் கலக்கவேண்டும். ஒரு முழு டீஸ்பூன் அளவு மிளகு எடுத்து பவுடராகப் பொடி செய்து, அதனை அந்தத் தண்ணீரோடு சேர்க்கவேண்டும். இரண்டு டம்ளர் தண்ணீருடன் சேர்ந்த அந்தக் கலவையை அரை டம்ளர் அளவுக்கு இளம் தணலில் சுண்ட வைக்கவேண்டும். பிறகு அந்தக் கஷாயத்தை காலை, மாலை இரு நேரங்களிலும் உணவுக்கு முன் அருந்தினால் சார்ஸ் நோய்க் கிருமிகளைக் கட்டுப்படுத்துகிறது. இதைத் தொடர்ந்து அருந்தும்போது, சார்ஸ் நோயாளிகளுடைய காய்ச்சல் குறைகிறது, மூச்சுத் திணறலும் குறைகிறது என்று சிங்கப்பூரில் இதனைப் பயன்படுத்தும் மருத்துவர்கள் கண்டு அறிந்துள்ளார்கள். சிங்கப்பூரைச் சார்ந்த சிலர் மஞ்சளையும், துளசியையும் சார்ஸ் நோயாளிகளுக்குப் பயன்படுத்துவதற்காகத் தமிழகத்திலிருந்து பெறுகிறார்கள். நம் நாட்டின் சித்தா மற்றும் ஆயுர்வேத மருத்துவ முறைகளில் துளசி, மஞ்சள், மிளகு ஆகியவற்றில் வைரஸ் நுண்கிருமிகளை அழிக்கக்கூடிய மூலப் பொருட்கள் உள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

According to the Siddha and Ayurvedha system of Indian Medicine, Thulasi, Turmeric and Pepper contain anti-viral active ingredients.

அதைப்போலவே, பப்பாளியையும் சார்ஸ் நோய்க்கு மருந்தாகப் பயன்படுத்தலாம். பப்பாளியில் ஏராளமான anti-oxidants எனப்படும் பொருள் உள்ளது. இது உயிரணுக்களுக்குப் புத்துணர்வைத் தந்து எதிர்ப்பாற்றலை ஊக்குவிக்குகிறது. சார்ஸ் நோயினால் ஏற்படும் பாதிப்பு, எதிர்ப்பு சக்தி இழப்பே ஆகும். எனவே பப்பாளியை உண்டு வந்தால், அது எதிர்ப்பு சக்தி ஊக்குவிப்பானாகச் செயல்பட்டு உடலில் எதிர்ப்பாற்றலை அதிகப்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் நடுவர் மன்றமும், உச்ச நீதிமன்றமும் மட்டுமே நியாயமான தீர்ப்பு வழங்க முடியும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா : இரண்டாவது அறிக்கை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக முதலமைச்சர் 1-5-2003 அன்று திருப்பதியில் பத்திரிகையாளர்களைச் சந்தித்துப் பேசும்போது காவிரி நடுவர் மன்றத்திற்கு வெளியே காவிரி நதிநீர் தாவாவைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ளவும், அண்டை மாநிலங்களுடன் நல்லுறவு வைத்துக்கொள்ளவும் ஆயத்தமாக இருப்பதாகத் தெரிவித்துள்ளார். இந்த அறிக்கை பெரும்பாலான பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது.

முற்பகல் 11-20

இந்தச் சந்தர்ப்பத்தில், நடுவர் மன்றத்தை நிறுவுவது குறித்த 4-5-1990 தேதியிட்ட தனது ஆணையில் உச்ச நீதிமன்றம் கூறியுள்ள சில கருத்துகளை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். "நான்கு முதல் ஐந்தாண்டு காலத்திற்குள் 26 முறை மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மற்றும் இந்த நீதிமன்றம் செய்திருக்கும் பல தள்ளிவைப்புகள் ஆகியவை இந்த இரு மாநிலங்களும் மத்திய அரசின் விருப்பத்தின்பேரில் அல்லது வேறுவகையில் பேச்சுவார்த்தையின் மூலம் முடிவுக்கு வர அளிக்கப்பட்ட போதுமான சந்தர்ப்பமும், போதுமான கால அவகாசமும் ஆகும். இந்த முயற்சிகள் எல்லாம் தோல்வியடைந்துவிட்ட காரணத்தால், பேச்சுவார்த்தையின் மூலம் இந்தத் தாவாவைத் தீர்க்க இயலாது என்று ஐயத்திற்கிடமின்றி முடிவு செய்வது பொருத்தமாக இருக்கும். இத்தகைய சூழ்நிலையில் பேச்சுவார்த்தை